பதிவு எண்—M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

5-கிளை தருதலம், மாம்பாக்கம்; நந்தன, மாசி; 6—3—53 தளிர் 23

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## அன்பின் விருத்தி

தொடர்புடையோர் பலர் நேர்தலால், ஒவ்வொருவரும் அன்பென்னும் உள்ள நெகிழ்ச்சியை அடைய வாய்ப்பிருக்கிறது. மேன்மேலும் அன்பு செய்து அதனைப் பெருக்கிக் கொள்வது கடமை; அதனால், அனைவர்க்கும் நன்மையே உண்டாகும்.

முதல் நன்மை, உயிருணர்வு மேலுமேலும் விளக்கமடைதல்; ஆர்வம் நட்பு என்னும் உணர்வு விருத்திகளை எய்துதல்!

தொடர்புடையோரிடம் செய்யும் அன்பு, பொதுவாக அனைவரிடத்திலும் அவரவர் நலங் கருதியே விருப்பமாக நடந்து கொள்ளும் நடத்தையை உண்டாக்குகிறது. அதனால் உணர்வு மேன்மேல் நயப்படுகிறது; பலரும் அவ் வினிமையால் புற நலங்கள் பல அமைதலோடு உணர்வினிமையும் பெறுகின்றனர்.

அதன்பின், பலர்க்கும் இணக்கமாகி, இடுக்கண் நேரங்களில் தாமே முன்வந்து உழைத்து உதவும் நட்புணர்வு பெருகுகின்றது.

அன்பின் இம் முதிர்ச்சிகளால் 'அருளிரக்கம்' என்னும் உயிர்ப்பண்பு பெருகி நிலைக்கும். இதனால், ஆசிரியர் 'அருள்' என்பதை 'அன்பு ஈன் குழவி' என்றார். அருள் தோன்றுமுன் அன்பு அடையும் உணர்வு விருத்திகள் நட்புவரையிற் செல்கின்றன.

நட்பால் நண்பர் இருவர் உணர்வுகளும் ஒத்த வளர்ச்சியும் ஆக்கமும் உடையன எனலாம். அதற்கு முன் நிலைகளாகிய அன்புடைமை ஆர்வமுடைமை என்னும் நிலைகள் தமக்கும் பிறர்க்கும் ஒத்த இணக்கத்தை உண்டாக்குவன அல்ல; அன்பு விருத்தியாகி நட்பென்னும் நிலைக்கு வருகின்றபோதுதான் இருபக்கமும் ஒத்த நிலை அதாவது இணக்க நிலை கூடியிருக்கின்றது.

அறிவின் கனிவு அன்பு என்றும், அதன் ஊக்கம் ஆர்வம் என்றும், அதன் செயல் நிலை 'நட்பு' என்றும் தெளியப்படும்.

நட்பு நிலை கைவந்தபின் அதன் முன்னிலையில் ஆகாதன என்பதும் கிடைக்காதன என்பதும் எதுவும் இல்லை. எல்லாம் இயல்பில் அமையும் பெருஞ் சிறப்பு நிலை அது!

அன்பு ஈனும் ஆர்வமுடைமை; அது ஈனும்
நண்பு என்னும் நாடாச் சிறப்பு.

அன்பு ஆர்வமுடைமை ஈனும்— அன்பு என்னும் பண்பு, பலரிடம் விருப்பமாயிருக்கும் தன்மையைத் தரும்; அது— அந்த ஆர்வமுடைமை, நண்பு என்னும் நாடாச் சிறப்பு ஈனும்— நட்பு என்னும் நாட வேண்டாத மேன்மையை உண்டாக்கும்.

உடைமை —உடையராயிருக்குந் தன்மை; பலரிடம் விருப்பத்துடன் நடந்துகொள்ளுவார்க்கு இயல்பாகவே நண்பர்கள் உண்டாதலின் அங்ஙனம் தாமே நாட வேண்டாமல் பெருகிவரும் நட்பை 'நாடாச் சிறப்பு' என்று விதந்தார்.

நட்பினால், பொருள் முதலிய எல்லா நலங்களும் உண்டாதலாலும், வேறு எதனாலும் அவ்வாறு உண்டாகாமையாலும் அத்தலைமை கருதி, நட்பைச் 'சிறப்பு' என்றார்.

நட்பைப் பற்றிய அதிகாரங்களைப் பொருட்பாலில் வைத்து ஆசிரியர் பலவாக விரித்தோதுதலாலும் இது பெறப்படும்.

அன்பில் பழகி வருவார்க்கு அதன் விருத்தி பெருகிவரும் முறைமையும் பயனும் இதனால் விளக்கப்பட்டன.

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
**5-ம் ஆண்டுக் கையொப்பம்**
**(3-10-52 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள் — | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி :—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

| கிளை | நந்தன, மாசி, | தளிர் |
|---|---|---|
| 5 | 6-3-53 வெள்ளி | 23 |

# கால வேகம்

காலவேகம் புயல் வேகத்தை விடக் கொடியது. அந்தச் சூறாவளியிலே சிக்கிச் சரிந்த சாம்ராஜ்யங்கள் கணக்கில.

அலையென முழங்கிவந்த நெப்போலியன் வீரவெற்றிகள் பெற்று, நாடு திரும்பினான். அவனோடு அவன் நாட்டுப் புகழ் பிற நாட்டுக்கு எட்டாது போயிற்று. ஆம்! 'முதல் அலை' முடிவுபெற்றது; அதன்பின் அலை எழும்புவதில்லை. கால வேகத்தை அறிந்து, அவன் விட்டுச் சென்ற இடத்தைப் பூர்த்திசெய்ய யாரும் கிளம்பவில்லை.

பெரும் பகுதி இந்தியாவை ஆண்டவனெனப் பெருமை கொண்ட அவுரங்கசீப்பையே அலறவைத்தான் சிவாஜி! அவன் காலவேகத்தின் அருமை மட்டுமல்ல, அதன் வேகத்தையே கடந்து செல்லும் வலிமை பெற்றிருந்தான்; அந்த ஒரே காரணத்தால் பெரும் பகுதி முகலாய சாம்ராஜ்யத்தின் மத்தியிலே ஒரு இந்து ராஜ்யத்தை அமைத்தான்! அந்த வழியை — காலவேகத்தின் அருமையை — உறுதியுடன் பின்பற்றினான் மதியூகி நானாபட்னாவிஸ். அவனுக்குப்பின் காலவேகத்தை அறிந்த மராட்டியர் இருந்ததாகத் தெரியவில்லை. சிவாஜி கண்ட நாடு மங்கிக் கொண்டே வந்து, மறைந்து போயிற்று!

கட்டப்பொம்மன், வெள்ளையரின் முதல் ஆதிக்கத்திற்கே வளைந்து கொடுக்காது, அதனை முளையிலேயே அழிக்க, ஒவ்வொரு விநாடியும் உழைக்கலானான். அந்நிய ஆதிக்கக் கூரைமேல் அவன் வைத்த தீ, ஆகஸ்டு 42-லே கொழுந்துவிட்டெரிந்து அதனை அழித்தது. ஆம்! கால வேகத்தை அறிந்தால் கடமையை உணரமுடிகிறது; கடமை ஆற்றினால், நாட்டிற்கு நலன் விளைகிறது!

இன்றும் காலவேகத்தைத் தமிழர் அறிந்ததாகத் தெரியவில்லை.

காலவேகத்தை நாம் அறிந்திருந்தால், இமயத்திலிருந்து சுருங்கிச், சுருங்கி, விந்தியத்திற்குத் தெற்கே வந்தது மன்றி, நம் இதயமாகிய சென்னையை எமதென்று மற்றவர் கூறும் நிலை ஏற்பட்டிராது.

காலவேகத்தை நாம் அறிந்திருந்தால், தமிழ்ப் பயிரை மேய்க்க அயல்மொழி ஆக்களை நுழையவிட்டிருக்கமாட்டோம்!

காலவேகத்தை அறிந்திருந்தால், நாம் குறளைப் பரப்பாது உறங்கி இருக்கமாட்டோம்!

காலவேகத்தை அறிந்திருந்தால், நாம் தமிழை ஆட்சிமொழியாக்கி, அதன் எழிலைச் சுவைத்திருப்போம்!

இத்தனையும் விட்டு இனி நாம் எத்தனைக் காலம் உறங்குவது? உலகத்தில் எத்தனையோ இழந்த பொருள்களை மீட்டும் பெறுதல் இயலும். ஆனால், இழந்த காலத்தை மீண்டும் பெறுதல் இயலாத தொன்று.

இன்றைய தமிழர் வாழ்வு தேய் பிறையாக உள்ளது. அதனை வளர் பிறையாக மாற்ற வேண்டும். நம் 'கலாசாரத்'திற்கு விளம்பரமில்லை. அதனைப் பாரறியச் செய்யவேண்டும்.

மலேயா சென்ற நம் வணிகர்க்குத் தீங்கென்று கேள்வியுற்று, அன்று மறத்தமிழன் போர் தொடுத்தான்! இன்று வேற்றுநாட்டிலே, நம்மவர் நாயினும் கேடாய் நடத்தப்படுவது கண்டு, வாய்மூடிக் கிடக்கின்றோம்.

இனியாவது புதிய மன்பதை (சமுதாயம்) அமைப்போம்; காலவேகத்தை உணர்த்துவோம்; வீரத்தமிழர் வரலாற்றை விளம்பரம் செய்வோம்; குறளைப் பரப்புவோம்; இந்தியக் கூட்டில் தமிழாட்சி காண்போம்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# கலைத் துறை

## நட்பின் இலக்கணம்

[திரு. R. கோவிந்தராசன் B. A.]

“நம் நண்பர்கள் நாம் அளவு கடந்து நேசிப்பதாலோ, அல்லது, அவர்களைப்பற்றி மிக உயர்வாய் நினைப்பதாலோ நமக்கு நட்பினிடை ஏமாற்றம் உண்டாவதில்லை. ஆனால், நம்பால் அவர்களுக்குள்ள நேசத்தையும், நம்மைப்பற்றிய அவர்கள் கருத்தையும் அளவு மீறி நாம் மதிப்பதின் மூலமே அத்தகைய ஏமாற்றம் எழுகிறது.

வழியிற் பிழை வாரமல் நாம் நம்மைப் போதிய விழிப்புடன் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்; நண்பர்களிடம் நாம் பெறும் அன்பைவிட அவர்கள் மாட்டு நாம் அதிக அன்பு காட்டுவதில் அமைந்து இன்புற வேண்டும்.

இருதிறத்தாரின் சந்தர்ப்பங்களை நேர்மையுடன் ஒப்பு நோக்கி, அவற்றின் வாயிலாக முடிவுகளைக் காண்பதில் நாம் மிகக் கூர்த்த மதியினராதல் வேண்டும். நம்மீது நமக்குள்ள அன்பினால் நாம் என்றும் குருடர்களாகக் கூடாது.

இவ்வாறொழுகினல், உணர்ச்சி மாறுபாடுகளால் மனித இனத்தின் மீதெழுகின்ற வெறுப்புக் காரணமாக நம் வாழ்க்கையில் கைப்புத் தோன்றாமல் நாம் தக்க முறையில் நிலை பிறழாமல் வாழலாம்.

இவையெல்லாம். பௌதிகத்திற்குச் சிறிது அப்பாற்பட்டவை போலத் தோன்றலாம். சிந்தித்துப்பார்த்தால் இவை நல்லறிவேயாகும்.

ஈண்டுக் கூறியவற்றின் கருத்து உண்மையானதொரு கடைக்காலின்மீது நாம் நமது நட்புக் கட்டடத்தை எழுப்ப வேண்டுமாயின், நம் நண்பர்களை நம் பொருட்டன்றி அவர்கள் பொருட்டே நாம் நேசிக்க வேண்டும். நமக்கவர்கள் உண்மையானவர்களாகும் அத்துணை அவர்கள் தங்களுக்கே உண்மையானவர்களா என்பதை நாம் ஆராய்ந்தறிய வேண்டும்.

நம்மைச் சார்ந்த மட்டில் அவர்கள் உண்மையுடன் நடப்பவர்களாயின், நம்மீது நமக்குள்ள அன்புக்குப் பழுது நேர்ந்தால், அவர்களிடம் நமக்குப் பகையுண்டாகிறது. தங்களிடத்து மட்டுமே அவர்கள் உண்மை வாய்ந்தவர்களாயின், நம் நண்பர்களின் குண நலத்திலும், குணநிலையிலும் காணப்படும் யாதாமொரு வருந்தத்தக்க மாறுதல், தங்கள் மனச்சான்றுகளைப் பிறர் அஞ்சும் வகையில் அவர்கள் மீறுதல், இவை மட்டுமே நம் உள்ளத்தை மாற்றக்கூடும்.”

ஆங்கிலப்புனைகதை ஆசிரியை ‘சார்லடி பிராண்டி’ (**Charlotte Bronte**) அம்மையாரின் நட்பைப் பற்றிய கருத்துக்கள். மேல் மொழி பெயர்க்கப்பட்டுள்ளவை.

நட்புக்கு இருவர் வேண்டும். அவ்விருவர்பாலும் தந்நலம் பிறர்நலம் என இரண்டுண்டு. தந்நலம் நோக்க நட்பில் நமக்கு ஏமாற்றம் உண்டாகிறது; நம் மனித இனத்தின். மீது வெறுப்புண்டாகிறது. நம் நண்பரிடத்தில் நமக்குப் பகையுண்டாகிறது. ஆகவே, உறுதியான நட்பு நமக்கு வேண்டுமானல் முதன்முதல் நம்மை நாம் மறக்க வேண்டும்; நண்பரிடத்தில் மிகுந்த அன்பு காட்ட வேண்டும், அவர் பொருட்டு அவரை நேசிக்க வேண்டும், அவருக்கே அவர் உண்மையானவரா வென்று நாம் ஆராய்ந்தறிய வேண்டும். சுருங்கக் கூறின், ஆசிரியை பிராண்டியின் கருத்து இதுவேயாகும்.

நண்பர் இருவரில் ஒருவர் தன்னை மறந்து மற்றொருவரையே நட்புக்கு அடிப்படையாகக் கருதுவதுதான் நட்பின் இலக்கணமானல், அம் மற்றொருவரும் தன்னை மறந்தாக வேண்டும். எனவே, இருவரிடத்தும் தந்நலத்திற்கு இடமே இல்லை. கருதவேண்டுவது மற்றொருவரின் நலமே ஆதலால், நம் நண்பருக்கு நாம் இன்ன தன்மை யுடையோம், அவர் நமக்கு இத்தன்மையர் என்னும் பேச்சே எழாது; ஆசிரியையின் கருத்துக்களினின்று தருக்க முறையில் நமக்குக் கிடைக்கின்ற இம் முடிபை நந் தெய்வப்புலவர் திருவள்ளுவர்,

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# அருள் துறை

## * நெஞ்சு விடு தூது *

(முத்துசாமி)

'நெஞ்சே, நீ சென்று தூதுரைக்கவேண்டிய என்னுடைய அன்பரான ஆண்டவன் இயல்பினை உனக்கு விளங்கக் கூறினேன்; அங்ஙனங் கூறிய பின் என்னுடைய இயல்பையும் சிறிது கூறுகிறேன் கேள்' என்றுரைப்பார் போன்று உயிரியல்பு கூறுகிறார்.

முப் பொருள்களில் பதியும் பசுவும் ஒரு சாதிப் பொருள்கள் என்றும் பாசம் இவற்றோடு எண்ணப்படும் இயல்பிலதாய தனித்த அறிவில் தன்மையுடையதென்றுங் கூறுவர். அங்ஙனம் ஆண்டவனையும் ஆன்மாவையும் ஒரு சாதிப் பொருள் என்று ஒரு சேர எண்ணிப் பேசுவதற்கு அவற்றிற்கு உளதாகிய பொதுவான தன்மை அறிவே. இரண்டும் அறிவுடைப் பொருள் என்பது கொண்டே அவற்றை ஒரு சாதிப் பொருள் என்பது. அங்ஙனம் பொதுத் தன்மையால் ஒரு சாதிப் பொருளாக எண்ணப் பட்டாலும் அவ்விரு பொருள்களுள்ளும் பெரு வேற்றுமையுண்டு. அவ் வேற்றுமைதாம் யாவையோவெனின், அவை இரு பொருள்களின் இயல்பு கூறவே விளங்கும். ஆகவே, ஆண்டவன் இயல்புகூறிப் பின்னர், உயிரியல்பு கூறுகிறார்.

"என்றுமுளன்...........
பொறியிலியேன்"

இறைவன், என்றும் உள்ளவன்; யானும் அப்படியே அன்றளவும் உள்ளவன்; ஆனால், அவனைப்போல நிலைத்தன்மையில் தாங்கி நிற்கமாட்டேன்; முட்டை, வேர்வை, விதை, கரு என்னும் நால்வகை 'யோனி பேதத்தில்' தோன்றும் எழுவகைப் பிறப்பிலும் எற்ற பிறப்பிற் சென்று சென்று பிறந்தும் இறந்தும் இருவினையாகிய பொல்லாங்கு நுகரும் அறிவில்லாதவன்.

இறைவனுக்குத் தோற்றம் இல்லை. இன்ன காலத்தில் அவன் உண்டானான் என்று சொல்லமுடியுமா? அப்படிச் சொன்னால் அதற்கு முன் இறைவன் இல்லையென்று பெறப்பட்டுச் சிறுமகாரும் சிரித்தற் கேதுவா மன்றோ? அதுபோல அவனுக்கு முடிவும் இல்லை. அப்படி அவனுக்கு முடிவு கூறினால் அங்ஙனம் முடிந்த பின்னர் இறைவன் இல்லையென்று பெறப்பட்டு முன்னைப்போலவே நகைத்தற் கேதுவாம். ஆகவே ஆண்டவன் என்றும் உளன் என்பது பெறப்பட்டது.

நாம் நாள்தோறும் பார்க்கின்ற பொருள் அனைத்தும் தோன்றி மறையுந் தன்மையவாயிருப்பதால் நம்மால் விரும்பப்படும். ஆண்டவனும் அப்படியே இருப்பானோ என்று ஐயப்பட்டுப் பின்னர்த் தெளிய வேண்டியிருக்கிறது.

இறைவன் எப்படி என்றும் உளனோ அவ்வாறே உயிர்களும் என்றும் உள. இறைவன் என்றும் உளன் என்பது ஒக்கும்; உயிர்கள் நாளும் பிறக்கவும் இறக்கவும் கண்கூடாகக் காணமுடிதலின் அவையும் இறைவனோடொப்ப என்றும் உளவென்

நஞ்சன்கூடு பல்பொடி

பாக்டெரியாரின்




யுனைடெட் கன்ஸர்ன்,

54; பந்தர்த் தெரு, :: சென்னை-1

பது ஒவ்வுமோ என ஐயுறலாம். நாளும் நாம் காணும் பிறத்தலும் இறத்தலும் உயிர்களைப் பொருந்திய உடல்களேயன்றி உயிர்களல்ல; நம் குழந்தை யொன்று தான் அணிந்திருந்த செந்நிற ஆடையைக் களைந்து வெண்ணிற ஆடையை மாற்றி யணிந்து கொண்டால் ஆடை மாற்றங் காரணமாக அது வேறு குழந்தை யென்போமோ? அதுபோல ஆன்மாக்களுக்குப் பிறவி யென்பது புது ஆடை அணிவித்தல் போலும் எனவும், இறப்பென்பது அவ்வாடை பழுதாய் விட்டதறிந்து களைதலுமே யெனவும் கொள்க.

இறைவனும் அறிவுடைப் பொருள்தான்; ஆன்மாக்களும் அறிவுடைப் பொருள்கள்தாம். ஆனால் ஆண்டவனுடைய அறிவு பேரறிவாய் மேலும் வளர்ச்சி யடையவேண்டும் என்பதொரு நிலையில்லாத முழுநிறைவு உடையதாயிருப்பது. ஆன்ம அறிவு குறைவுடையதாய் நிறைய வேண்டிய நிலையிலுள்ளது. அதற்குக் காரணம் மலமறைப்பு. ஆகவே ஆன்மாக்கள் அம் மல மறைப்பு நீங்கும் வரையும் பிறந்து பிறந்து இறந்து இறந்து, கிடைக்கும் உடலின் துணை கொண்டு மல நீக்கம் பெற்று அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளன. ஆகவே இறைவனுக்கும் ஆன்மாக்களுக்கும் காலத்தால் பேதம் இல்லை; தன்மையால் பேதமுண்டென அறிக.

ஆன்மாக்கள் பிறந்து பிறந்து இறந்து இறந்து, கிடைக்கும் உடல்களின் துணை கொண்டு மல நீக்கம் பெற்றுக் கொள்ள வேண்டி யிருக்கிறது என்று கூறினோம். அங்ஙனம் பிறக்கும் பிறவிகள் அனைத்தும் நால்வகை யெனக் கணக்கிட்டிருக்கின்றனர். ஈண்டு நால்வகை யென்றது 'யோனி பேத' வகைகளை. அவைகளாவன: முட்டை வேர்வை, விதை, கரு. இவற்றை முறையே வடநூலார் அண்டசம் சுவேதசம், பீசம், சராயுசம் என்பர்.

பிறக்கும் பிறவிகள் அனைத்தும் நால்வகையென்று எப்படி நம் முன்னோர்களால் வரையறுத்துக் கூறமுடிந்தது? எல்லாப் பிறப்புகளையும் நேரில் பார்த்து ஆராய்ந்து முடிவு கூறியிருக்க முடியுமா? எல்லாப் பிறப்பையும் பார்த்து முடிவு கூறுவதென்றால் அதற்கு எவ்வளவு காலமாகும்? பின்னையெப்படிதான் கூற முடிந்தது? ஏதேனும் நூல்களில் படித்திருப்பார்கள்; அதனை எடுத்துக் கூறியிருப்பார்கள் என்று எளிதாக விடையிறுக்கலாம். முன்னூலில் பார்த்துக் கூறினார்கள் என்றால், அந்த முன்னூலாசிரியர் எப்படிக் கூறியிருப்பர்? அவரும் வேறு நூலைப் படித்துக் கூறியிருப்பர் எனின், அந்த வேற்று நூலாசிரியர்தாமும் எப்படிக் கூறினர் என்று ஆராய்ந்து கொண்டேபோனால் யாரேனும் முதன் முதலில் தாமே கண்டிருக்க வேண்டுமன்றோ? அவர் எப்படிக் கண்டார்? அவருக்கு, ஒரு நொடியில் எல்லாம் விளங்க அறியவல்ல இறைவன் ஒருவன் தான் உணர்த்தியிருத்தல் வேண்டும். அருளால் காணும் முடிபுக்கும், தம் முயற்சியால் காணும் ஆராய்ச்சி முடிபுக்கும் உள்ள வேறுபாடு கண்டு கொள்க.

விஞ்ஞான வகையில் மேலை நாட்டார் ஒருவர் கண்ட முடிவைத் தவறென்று பின் வருவோரில் ஒருவர் கூறி மறுத்தலும் காண்கின்றோமன்றே. அருளால் இந்நாட்டில் பட்டினத்தடிகள் கண்டதை வாதவூரார் மறுத்தாரா? வாதவூரார் கண்டதைச் சம்பந்தரும் அப்பரும் மறுத்தனரா? அவர்கள் கண்டதைச் சுந்தரர் மறுத்தாரா? சுந்தரர் கண்டதைச் சேக்கிழார் மறுத்தாரா? சேக்கிழார் கண்டதைப் பின் வந்த ஏனைப் பெரியோரும் இன்று எம் ஆசிரியர்தாமும் மறுக்கின்றனரா?

ஒருவர் கூறியதை மற்றவர் அப்படியே கூறிப் பின்பற்றுகின்றனர். காரணம் என்ன? குருட்டு நம்பிக்கை யென்று இருட்டில் தடுமாறித் தத்தளிக்கும் பேதை யொருவன் கூறுவான். அதை யொழிமின். அருட்காட்சியில் குறைவுகள் தோன்றா. நிறைந்த உண்மையே தோன்றுமென்க.

நால்வகை யோனி பேதத்தில் உயிர்கள் பிறக்கின்ற வாயினும் அப் பிறப்புகள் தாமும் எழு பிரிவினை யென்று மேலும் ஓர் உண்மையும் கூறியிருக்கின்றனர். அவ் வேழு பிரிவாவன: நிலையுடைப் பொருள்கள், ஊர்வன, நீர்வாழ்வன, பறப்பன, விலங்குகள், மக்கள் தேவர்.

முன் சொன்ன நால்வகையில் இவ் வேழு பிரிவுகளும் அடங்கும். இவ் வேழு பிரிவினையை இயங்காதன இயங்குவன என்று இரண்டாக்கியும் கூறுப. மரம் செடி கொடிகள் இயங்காதன; மற்றவை இயங்குவன. இங்ஙனம் வரையறுத்துக் கூறியதற்கு மேற்பட்ட ஒரு வகையோ அல்லது ஒரு பிரிவோ யாரேனும் கூற முடியுமா? எஞ்ஞான்றும் கூறமுடியாதென்று உறுதியாய்க் கூறலாம்.

இத் தன்மைத்தான பல்வேறு வகையான பிறப்புகளிலும், செய்த வினைக்கு ஏற்ப உயிர்கள் சென்று சென்று பிறக்கும்; பிறந்து இருவினையைத் துய்க்கும். ஈண்டு இருவினையைப் 'பொல்லாங்கு' என்றார். இருவினை யென்பது நல்வினை தீவினை யென்பன. தீவினையைப் பொல்லாங்கு எனல் தகும்; நல்வினையைப் பொல்லாங்கு எனல் தகுமோ வெனின், தகும்.

தீவினை இருப்பு விலங்கானால், நல்வினை பொன் விலங்கு போன்றது என்ப. இரண்டும் விலங்கேயாதலால் இரண்டும் நமக்குப் பிறவியாகிய துன்பந் தருவனவே. ஆகவே இரண்டையும் பொல்லாங்கு என்றார்.

நல்வினையும் பொல்லாங்காயின் நம் மூதாட்டி ஔவைப் பிராட்டி 'அறஞ் செய விரும்பு' என்று கூறியது தகுமோ வெனின், தகும். அறம் என்பது நல்வினையையன்று. அறம் என்பது நல்வினை தீவினை இரண்டையும் கடந்த இறைபணி யென்று கொள்ளல் வேண்டும்.

இறைபணியென்பது ஒரு செயலை, இது நற்செயல் என்றும் இது செய்தால் நற்பயன் கிட்டும் என்றும் கருதாமல், இது செய்தக்கது என்ற ஒரே கடமை நோக்கத்தால் செய்வதாம்.

நாம் ஒவ்வொரு பிறவியிலும் என்ன செய்கிறோம்? இருவினையைத் துய்க்கிறோம். துய்த்தால் அறிவுவளரும். 'தண்டிக்கப்பட்டும் புத்தியில்லையா?' என்ற உலக வழக்கு இக் கருத்தே பற்றியெழுந்தமை யறிக. அங்ஙனம் துய்த்தும் ஞானம் வளரவில்லையானால் மேலும் தண்டிக்க வேண்டியதுதானே. ஆகவே 'பொறியிலியேன்' என்றார். பொறி – அறிவு; ஞானம். வினைகளைத் துய்க்கும்போது துன்பப்பட்டால் தீவினையைத் துய்க்கிறோம் என்றும் இன்பப்பட்டால் நல்வினையைத் துய்க்கிறோம் என்றும் எண்ணிக்கொள்கிறோம்.

ஆனால் ஆசிரியர் துன்பத்தைப் பொல்லாங்கென்றது போலவே இன்பத்தையும் பொல்லாங்கு என்றனரே; அஃதெவ்வாறு ஒக்கும்? நல்வினைகள் இறைவனை அடைதற்குரிய முயற்சிக்கு ஏற்ற வசதிகள் செய்து கொடுக்குமாயின், அவை பொல்லாங்கெனத் தள்ளப்படா. அன்றி, வெறும் புலன் துய்ப்பினையே கொடுத்துக் கெடுக்குமாயின் பொல்லாங்கென இகழப்படும். பொல்லாங்கெனக் கருதப்படும் வகையில் துய்க்கின்றமையால் தன்னைப் பொறியிலியேன் என்று கூறிக் கொண்டார்.

"கல்லா........உரையேன்"

சற்றும் படிப்பறிவு இல்லாத உலகாயதனை யொத்த அற்ப அறிவு உடையவனாகித், துய்ப்பதின் ஆசையில் கணையினும் வேகமாகச் சென்று குடிப்பழிக்கேதுவாவன செய்தும், மிக்க கொலை களவு காமத்தால் இப் பூவுலகில் தேடித் தேடிச் செய்து உழன்றும், தெரிய வேண்டியவைகளைத் தெரியாமல் வாடித் துன்பப்படும் மனத்துக்கும் அது போனவழியே போகும் புத்திக்கும் அப் புத்தி போனவழியே போகும் அகந்தைக்கும் நிலைக்களனை மேனி மூப்பால் தளர்ந்தபோது தானும் தளர்ந்தும் அது இறுதியில் அழிவுறும்போது சொல்லற்கரிய துன்பமுறும் உயிரினது துயரத்தின் அளவிற்கோர் எல்லையில்லையாதலால் எடுத்துக் கூறேன்.

சிலர் நல்ல கல்வி கேள்விகள் உடையராயிருப்பர். பிறருக்கும் நல்லுரைகள் கூறுவர். ஆனால் தன் நடத்தையில் உலகாயதனைப் போன்று துய்த்துக்கொண்டிருப்பர். அருள் நூல்களைக் கற்றிருந்தும் அவ்வருள் நூல்களில் கண்டவாறு நடக்காது உலகாயதனைப் போன்று உலகினைத் துய்த்துக் கொண்டிருந்தால் அவ்வருள் நூல்களைக் கற்றதனாலாய பயன் என்?

உலகாயதன், உலகம் துய்த்தற்கிருக்கிறது என்று எண்ணித் துய்க்கமட்டுந் தெரிந்தவன். மற்று, அவ்வுலகு யாரால் படைக்கப்பட்டது, யாருடைய உதவியால் நாம் துய்க்கிறோம்? துய்க்கின்றது என்பது உடலா அல்லது உயிரா? துய்த்து வாழ்ந்து பின்னர் இறந்த பின் என்னும்? என்றவாறெல்லாம் சிறிதும் எண்ணிப்பாராதவன்.

இவற்றைப்பற்றிய நூல்களைக் கொடுத்தாலும் கல்லான்; ஆகவே கல்லாத அவன் தவறாகக் கருதிக் கொண்டு துய்த்தொழிதலைப் போன்று கற்றவர்களும் துய்த்தலே பொருளென வாழ்ந்தால் அன்னாரும் உலகாயதனோடு எண்ணப்படும் கல்லா அறிவினரே என்பார் தன்னைக் "கல்லா உணர்வின்மிசை ஓடும் உலகாயதனைப் புணர்வதொரு புல்லறிவு பூண்டு" என்றார்.

குடிப்பழி யென்பது தன் குடிக்குப் பழி வரும் காரியம் செய்தலும் பிறர் குடியைக்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

தமிழகத்தின் நலத்திற்காகத் தவ நோக்கோடு

குருகுல ஆசிரியர் இளவழகனார்

## உண்ணா நோன்பு

மாகாணப் பிரிவினை நிலைகளில் தமிழகம் போதிய விழிப்பும் அமைப்பும் பெறும் பொருட்டு 7-3-53 முதல் மூன்று நாட்கள்!

சென்னைச், சிவனடியார் திருக்கூட்ட மண்டபத்தில், அம்பலவாணர் திருமுன்னிலையில் இந்த உண்ணா நோன்பும் தவமும் நிகழும்.

## வள்ளுவர் திருநாள்

கவுந்தப்பாடி நாட்டாண்மைக் கழக உயர்நிலைப் பள்ளியில் (3-3-53) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3-மணிக்கு 'வள்ளுவர் திருநாள்' கொண்டாடப் பெற்றது. அவ்வமயம் கோபி செட்டிப்பாளையம், திருக்குறள் தொண்டர், திரு. பொ. சிவ ஞான தேசிகர் அவர்கள் தலைமை வகித்தார்கள். பள்ளித் தலைமையாசிரியர், திரு. என். கே. சவுண்டப்பச் செட்டியார் அவர்கள் யாவரையும் வரவேற்றுப் பேசினார்கள்.

பின், கோபிசெட்டிப்பாளையம் வயிர விழா உயர்நிலைப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் திரு புலவர் குமாரசாமி கவுண்டரவர்கள் 'வள்ளுவர் வாய்மொழி' என்னும் பொருள்பற்றி அரியதோர் சொற்பொழி வாற்றினார்கள்.

தலைவர் பின்னுரைக்குப் பின் பள்ளித் தமிழாசிரியர் கோ. முருகையா நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது.

குடிசைத் தொழிலில்
தலைமையானது
நெய்தல் தொழிலே!

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள்
கிசான் டிரேட்மார்க்




பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்கு தெரு சென்னை 1.

## குருகுல வெளியீடுகள்

1. ஒளி வழிபாடு — விலை அணா 6.
2. திருமூலர் அருள்மொழிகள் — விலை அணா 4.
3. தணிகைமலை அல்லது அமைதி — விலை அணா 6.
4. திருக்கழுக்குன்றப் பதிகம் — விலை அணா 2.
5. கருக் கலை — விலை அணா 4.
6. மூன்று உண்மைகள் — விலை அணா 3.
7. இராமலிங்க அடிகள் வரலாறும் திருவருட்பா ஆராய்ச்சியும் — விலை அணா 9.
8. முல்லைப்பாட்டு அகராதி — விலை அணா 8.
9. தொல்காப்பியம் அகத்திணையியல் விளக்கம் — விலை ரூ. 1.
10. ஆத்திசூடி - கருத்துரை — விலை 0-0-3.

கிடைக்கும் இடம்:

குருகுலம், மாம்பாக்கம்;
மதுராந்தகம், P. O., (S. R.)

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

இவற்றுக்கெல்லாம் இனி வாலிபரே தேவை. கால வேகத்தை உணர்ந்த வாலிபர் செயலாற்றின் ஞாலத்தையே வெல்லமுடியும்.

ஆம்! முளை சிறிபதுதான்; அதற்குள் அகண்ட ஆலமரம் அடங்கியிருக்கிறது.

சிறிய விளக்கு; அதிலிருந்து பேரொளி பிறக்கிறது!

சிறு பாதை; அதன் வழிச் சென்றால் அரசபாட்டையை அடையலாம்!

குறள் இரண்டடிதான்; அதற்கடியில் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட அடிகள் அண்ட கோடிகளுடன் மறைந்து கிடைக்கின்றன.

காலம் ஓடிக்கொண்டே இருக்கிறது; வழிவழிப் பெருமக்கள் (பெரும் சந்ததியர்) மாய்ந்துகொண்டே இருக்கிறார்கள். அவர்கள் விட்டுச் சென்ற இடத்தை நாம் நிரப்ப வேண்டாமா?

"முன்செல் முன்செல் மனிதா!
முன்செல் உலகத் தூடனே
பொன்செய் பொன்செய்
பொழுதை--ஒரு
பொழுதும் வீணுக் காதே!"

என்ற பாவரசர் பாடலை நினைவு கொண்டு, காலவேகத்தைவிட வேகமாக முன்னேறிச் செல்வோம்.

—சே. கிருஷ்ணசாமி.

Telegrams: "RAMBROS'

**N. Ramu Bros;**

GENERAL HARDWARE
MERCHANTS

AVANASHI ROAD.
COIMBATORE.

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

"இனையர் இவர், எமக்கு
இன்னம் யாம் என்று
புனையினும் புல்லென்னும் நட்பு"

என்ற குறளடிகள் இரண்டில் முடித்துக் காட்டினார்.

மேலும், இயல்பாக எழாத பேச்சைப் புனைந்துரையாகப் பேசினாலும், பேசப்பட்ட பொருளாகிய நட்பின் தன்மை குன்றிவிடும் என்கிறார் குறளாசிரியர். நண்பர் இருவர் தமக்குள் வேற்றுமை ஒன்றுமில்லை என்பதை நன்கறிவர். ஆயினும் தாம் பேசுவதைப் பிறர் அறியும் வண்ணம் தாம், அவர் என்று பிரிக்கவேண்டி வந்தது. கேட்பவர் தம்மிருவரையும் வேறாகக் கொள்ளப் போகிறாரே என்று "அவர் என் அருயிர்த் தோழர்" என்றார் ஒருவர்; மற்றவர் முதலில் பேசியவரை "எய்ப்பில் இவர் எனக்கோர் வைப்பு" எனக் குறித்தார் — இருவரும் கூறியவை அலங்காரச் சொற்களேயாகும். என்றாலும், இருவரும் மனதில் வேற்றுமையுற்றிலரேனும் அவர்தம் சொற்களால் எழுந்த வேற்றுமையால் அவர்தம் நட்புப் புல்லிதாயிற்று. பொய்யாமொழிப் புலவரின் இக் கருத்தைப் பரிமேலழகர், "தாம், அவர் என்னும் வேற்றுமையின்றி வைத்துப் புனைந்துரைப்பினும் வேற்றுமை உண்டாமாகலின், நட்புப்புல்லென்னும் என்றார்" எனக் கூறி விளக்கினார்.

மேனாட்டுப் பிராண்டி அம்மையார் பலபடக் கூறி விளங்க வைத்த நட்பின் இலக்கணத்தை நவ (ஒன்பது) சொற்களில் காட்டிய நம் வள்ளுவருக்குத் தமிழகம், அவர் தந்த குறளைப் பயில்வதல்லால், யாது கைம்மாறு தருங்கொல்!

(6-ம் பக்கம் தொடர்ச்சி)

கெடுத்தலாகிய பிறன் மனை விழைதலுமாம். கொலை களவு காமம் செய்வாரும் குடிப்பழி செய்வாரும் துய்த்தலுக்குக் கணையை விட வேகமாகச் செல்வர்; படக்காட்சிக்கு நேரமாயிற்றென்று தலைகால் தெரியாமல் ஓடுவாரை வைத்து இதனைத் தெரிந்து கொள்ளலாம். பொருள்களைத் துய்த்தலுக்கு ஓடும் வேகத்தைக் கெடுத்து இறைவன்பால் திருப்பிவிட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்! மனம் புலன்வழி யோடுவதால் தான் இப்படி யோடுகின்றனர். அதுபோன வழியே புத்தியும் சென்று இது சரியென்று நிச்சயித்து விட்டால் கேட்கவும் வேண்டுமா? இன்னும் அகங்காரமும் ஆற்றலாய் முனைந்தெழுந்து விட்டால், செய்யும் தீய செயல்களின் அளவினை எண்ணவும் முடியுமோ? இப்படியேதான் மக்களில் பெரும்பாலார் கெடுகின்றனர்.

கல்லாத உலகாயதன்தான் கெடுகின்றான் என்றால், கற்றவர்களும் மன அடக்கமின்றி இப்படியே செய்துகொண்டிருந்தால் உய்திக்காலம் எப்போது? பின்னர் மூப்பு வந்து மேனி தளர்ந்து அழியுங்காலத்து உய்திக்குரியன செய்யாமல், இன்னபடி யெல்லாம் செய்தொழிந்தேனே யென்று எண்ணியழியும் துயரத்துக்கு ஓர் அளவும் உண்டோ?

தீய வழியில் செல்வார் செயலெல்லாம் அந்தக் கரணங்களோடு முடிவன என்பார் அகங்காரத்தோடு முடித்துக் கொண்டார். இவற்றிற்கு மேல், உள்ளுணர்வில் மேம்பட்டோர், இத்தகைய தீய தொழில் செய்யார் என்பதையும் அறிக.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: இ. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம்: மதுராந்தகம் (அஞ்.)